# PRIMARY SCHOOL

## PRELIMINARY EXAMINATION - 2015

## TAMIL LANGUAGE - PAPER 2

## PRIMARY 6

பெயர் : ____________________ நேரம்: 1 hr 40 mins

வகுப்பு : P6/ ______ மதிப்பெண்கள் : ____________/90

<u>கட்டளைகள்</u>

1. ஆசிரியர் சொல்லும்வரை தாளைத் திருப்பாதே.
2. கட்டளைகளைக் கவனமாகப் படித்துப் பின்பற்று.
3. எல்லா கேள்விகளுக்கும் பதில் அளி.

<u>சிந்தித்து செயல்படு</u>



பொழுது போக்கு
மீன்களை ரசித்து
தோட்டத்தில்
கறுப்பு பூனை
சந்தேகத்துடன்
வீட்டுக்கூரையில்
கழியை
தொட்டிக்குள்
சினத்துடன்
யோசிக்காமல்

## P6 PRELIMINARY TESTPAPER 8

**வேற்றுமை உருபு**
**1 முதல் 6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

ஓர் ஊரில் சிறிய குடும்பம் ஒன்று இருந்தது. அதில் கணவன், மனைவி, மகள், மகன் ஆகிய நால்வரும் ______(1)______ வாழ்ந்து வந்தனர். சந்தைக்குப் போன தாய் திராட்சைக்குலை_____(2)_____ வாங்கிக் கொண்டு வந்தாள். அதை தன்_____(3)_____கொடுத்தாள். அதில் ஒரு பழத்தை எடுத்து வாயில் போட்டுச் சுவைத்ததும், தன் தம்பியின் நினைவு வந்தது. உடனே தம்பியிடம் கொடுத்தாள். அவன் ஒரு பழத்தைச் சாப்பிட்டதும்____(4)____ வேலை செய்து கொண்டிருந்த தந்தையிடம் ஓடிப்போய்க் கொடுத்தான். அவர் ஒரு பழத்தை எடுத்துச் சாப்பிட்டதும், சமையல் அறையில் இருந்த_____(5)____ நினைவு வந்தது. அவளிடம் ஒரு பழத்தைக் கொண்டு போய் கொடுத்தார். அதை____(6)______வாங்கிக் கொண்ட மனைவி, "இந்தத் திராட்சைக் கொத்து எங்கிருந்து புறப்பட்டதோ அந்த இடத்துக்கே திரும்பி வந்து விட்டது!" என்று அன்புடன் கூறினாள். உண்மையான பாசம் கொண்ட குடும்பம் இப்படித்தான் இருக்கவேண்டும்.

1. (1) பாசத்தில்
   (2) பாசத்திற்கு
   (3) பாசத்தால்
   (4) பாசத்துடன்

2. (1) ஒன்றோடு
   (2) ஒன்றை
   (3) ஒன்றிலிருந்து
   (4) ஒன்றின்

3. (1) மகளிடம்
   (2) மகளுக்கு
   (3) மகளை
   (4) மகளுடன்

4. (1) தோட்டத்தை
   (2) தோட்டத்தில்
   (3) தோட்டத்திலிருந்து
   (4) தோட்டத்திற்கு

5. (1) மனைவியோடு
   (2) மனைவிக்கு
   (3) மனைவியின்
   (4) மனைவியால்

6. (1) மகிழ்ச்சியில்
   (2) மகிழ்ச்சியால்
   (3) மகிழ்ச்சிக்கு
   (4) மகிழ்ச்சியோடு

**செய்யுள் / பழமொழி**

**7 முதல் 12 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான செய்யுள் / பழமொழியைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

7. நல்லிணக்கம் ______________ அல்லற்படுத்தும்.

(1) அகன்றால்
(2) இல்லையேல்
(3) அல்லது
(4) இழந்தால்

8. இன்னா செய்தாரை ______________ அவர்நாண நன்னயம் செய்து விடல்.

(1) தண்டித்தல்
(2) பொருத்தல்
(3) ஒறுத்தல்
(4) கண்டித்தல்

9. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது __________.

(1) தர்மம்
(2) அறம்
(3) நலம்
(4) பண்பு

10. ______________ புல்லும் ஆயுதம்.

(1) வல்லவனுக்கு
(2) நல்லவனுக்கு
(3) அறிஞனுக்கு
(4) கற்றவனுக்கு

11. ஔவியம் ____________________.

(1) ஒழியேல்
(2) இகழேல்
(3) விளம்பேல்
(4) பேசேல்

12. பெருமையும் ____________ தான் தர வருமே.

(1) வறுமையும்
(2) உடைமையும்
(3) சிறுமையும்
(4) உரிமையும்

<u>தெரிவுவிடை கருத்தறிதல்</u>
கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி. கீழே கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடை எழுது.

பல ஆண்டுகளாக காட்டில் மழை இல்லாத காரணத்தால் கடும் வறட்சி ஏற்பட்டது. அந்தக் <u>காட்டில்</u> வாழ்ந்து வந்த நாகப்பாம்பு ஒன்று குடிப்பதற்கு ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல், தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தது. அயல் கிராமத்திற்கு அந்த நாகப்பாம்பு சென்றதும் அங்குள்ள ஒரு வீட்டுக்குள் நுழைந்தது. அங்கே பெரிய பாத்திரத்தில் உள்ள தண்ணீரில் ஒரு குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. குழந்தையின் தாய் வீட்டில் இல்லை. அந்த வீட்டுக்குச் சென்ற நாகப்பாம்பு, பாத்திரத்தில் உள்ள தண்ணீரைக் குடித்தது. பாம்பு குழந்தையை ஒன்றும் செய்யவில்லை. அது வயிறு நிறையத் தண்ணீரைக் குடித்து விட்டுச் சென்றுவிட்டது. இப்படியாக தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் பாம்பு அந்த வீட்டுக்குச் சென்று தண்ணீர் குடித்துவிட்டு வந்தது.

ஒருநாள் ஒரு விரியன் பாம்பு நாகப்பாம்பைச் சந்தித்தது."நண்பனே! நீ எங்கே சென்று தண்ணீர் குடித்தாய்?" என்று நாகத்தைப் பார்த்துக் கேட்டது விரியன். "நான் அந்த வீட்டுக்குச் சென்றேன். அங்கு ஒரு குழந்தை ஒரு பெரிய பாத்திரத்தில் உள்ள தண்ணீரில் விளையாடிக் கொண்டிருந்தது. நான் மெதுவாகச் சென்று தண்ணீர் குடித்தேன். குழந்தையை ஒன்றும் செய்யவில்லை. தண்ணீரைக் குடித்துவிட்டு வந்துவிட்டேன். அதைப் போல நீயும் அங்கே போய் தண்ணீர் குடித்துவிட்டு வா. ஆனால், குழந்தைக்கு ஒரு <u>கெடுதியும்</u> செய்து விடாதே!" என்று கூறியது நாகம். விரியன் பாம்பை அந்த வீட்டுக்கு அனுப்பி விட்டு, அதன் பின்னால் சென்று நாகம் மறைந்திருந்தது. விரியன் அந்த வீட்டுக்குச் சென்று தண்ணீர் குடிக்க ஆரம்பித்தது. வயிறு நிறையத்

தண்ணீரைக் குடிக்கும் வரை விரியன் குழந்தையை ஒன்றும் செய்யவில்லை. தண்ணீர் குடித்து முடித்த பின், விரியன் குழந்தையின் தலையில் கடித்தது. குழந்தை மயங்கி விழுந்தது. நாகம் உடனே ஓடிச் சென்று குழந்தையின் தலையில் உள்ள விஷத்தை உறிஞ்சி எடுத்தது. குழந்தைக்கு உணர்வு திரும்பியது. நாகம் விரியன் பாம்பைத் துரத்திச் சென்று, "துரோகியே! நீ உயிரோடு இருக்கக் கூடாது! " என்று கூறிக் கொண்டே அதனைக் கடித்துச் சாகடித்தது. அன்று முதல் விரியனும், நாகமும் ஒருவருக்கொருவர் பரம எதிரியாக இருந்து வருகின்றனர்.

**விைனாக்கள்**
**13 முதல் 17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவுக்கும் ஏற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

13. பாம்பு ஏன் கிராமத்திற்குச் சென்றது?

(1) காட்டில் குடிக்க தண்ணீர் கிடைக்காததால்
(2) தன் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள
(3) பாத்திரத்தில் உள்ள தண்ணீரைக் குடிக்க
(4) காட்டில் கடும் வறட்சி ஏற்பட்டதால்

14. குழந்தை என்ன செய்து கொண்டிருந்தது?

(1) வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தது.
(2) தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது.
(3) தண்ணீரில் விளையாடிக் கொண்டிருந்தது
(4) பாத்திரத்தில் இருந்த தண்ணீரில் குளித்துக் கொண்டிருந்தது

15. நாகப்பாம்பு குழந்தையைக் கடிக்காததற்குக் காரணம் என்ன?

(1) தினமும் வயிறு நிறைய தண்ணீர் குடிக்க
(2) குழந்தை அதற்குத் தண்ணீர் தந்ததால்
(3) அதனுடைய தாகம் தீர்ந்ததால்
(4) அதற்குத் துரோகம் செய்ய விரும்பாததால்

16. குழந்தை எவ்வாறு உயிர் பிழைத்தது?

(1) நாகப்பாம்பு விரியனுடன் சண்டை போட்டதால்
(2) குழந்தை மயங்கி விழுந்ததால்
(3) நாகப்பாம்பு விஷத்தை உறிஞ்சி எடுத்ததால்
(4) குழந்தைக்கு உணர்வு திரும்பியதால்

17. விரியன் ஏன் உயிரோடு இருக்கக் கூடாது?

(1) அது நாகப்பாம்பு கூறியதைக் கேட்காததால்
(2) அது நாகப்பாம்புக்குப் பரம எதிரி என்பதால்
(3) அது ஒரு நன்றி கெட்ட பாம்பு என்பதால்
(4) அது ஒரு கொடிய பாம்பு என்பதால்

<u>சொற்பொருள்</u>

18 முதல் 20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லை எல்லா கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

18. காட்டில்
(1) வனத்தில்
(2) நிலத்தில்
(3) சோலையில்
(4) புற்றில்

19. கெடுதியும்
(1) துன்பமும்
(2) துரோகமும்
(3) வேதனையும்
(4) தீங்கும்

20. விஷத்தை
(1) மருந்தை
(2) நஞ்சை
(3) காயத்தை
(4) தண்ணீரை

<u>கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்</u>

**பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:**

**மண்டாய்ப் பறவைப் பூங்கா தனது "பறவைகள் உலகம்" என்னும் மற்றுமொரு காட்சியகத்தின் திறப்பு விழாவை 20 ஜூன் 2013 நடத்தவிருக்கிறது.**

மண்டாய் ஏரியின் அருகே ஊர்வன பூங்காவிற்கும் ஆர்க்கிட் பூங்காவிற்கும் இடையே 'பறவைகள் உலகம்' காட்சியகம் புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது.

**குடும்பத்துடன்**
**வருவோருக்கு**
**50% கழிவு**

இந்த விளம்பரத்தை மண்டாய்ப் பறவைப் பூங்காவில் காட்டி, *குடும்பச் சிறப்புச்சலுகைத்திட்டம் ஒன்றை $22-க்குப் பெற்றுக்கொள்ளுங்கள்.
இச்சலுகை 25 ஜூலை 2013 வரை தான்!

*ஒரு குடும்பம் என்பது 2 பெரியவர்களையும் 3 பிள்ளைகளையும் (மூன்று வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள்) கொண்டது.
இச்சலுகையில் ரயில் பயணமும் பிள்ளைகளுக்குப் பலூன்களும் இலவசம்!

அதனோடு இன்னும் $6 கட்டினால் இந்த இடத்தை ஓர் அதிகாரி சுற்றிக்காட்டுவார்; அனைவருக்கும் இலவச குளிர்பானமும் வழங்கப்படும்.

மேலும் தகவல்கள் பெற 1800-67896857 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளுங்கள்

**21 முதல் 23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**
**(6 மதிப்பெண்கள்)**

21. எதைக் காட்டினால் குடும்பச் சலுகைத் திட்டத்திற்குத் தகுதி பெறலாம்?

(1) நுழைவுச்சீட்டை
(2) அடையாள அட்டையை
(3) விளம்பரத்தை
(4) குடும்பத்தை

( )

22. குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் எது இலவசமாக கொடுக்கப்படும்?

(1) ரயில் பயணம்
(2) குளிர் பானம்
(3) சிறப்புச் சலுகை
(4) சுற்றிக் காட்ட ஓர் அதிகாரி

23. பறவைகள் உலகம் காட்சியகத்தை ஓர் அதிகாரி சுற்றி காண்பிக்க ஒருவர் என்ன செய்ய வேண்டும்?

( )

(1) குடும்பச் சிறப்புச் சலுகைத் திட்டத்தை பெற வேண்டும்
(2) 1800-67896857 என்ற எண்ணுடன் தொடர்புக்கொள்ளவேண்டும்
(3) குடும்பத்துடன் வர வேண்டும்
(4) குடும்பச் சலுகைத் திட்டத்தோடு மேலும் $6 கட்ட வேண்டும்

**ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

**பின்வரும் பகுதியில் 24 முதல் 28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

"ஆ" பிரிவு

ஒலி வேறுபாடு

24. மாலதி பள்ளி முடிந்து வீடு திரும்பினாள். மாமாவிடமிருந்து வந்த கடித __________ கிழிந்து இருப்பதைக் கண்டாள். 24. ( )

25. வாழைத்தோட்டத்தில் பல தொழிலாளிகள் வேலை செய்தார்கள். அவர்கள் ஆடைகளில் வாழை __________ படிந்திருந்தது. 25. ( )

26. திருவாட்டி கமலா முதியோர் இல்லத்தில் தங்கி இருக்கிறார். இப்பொழுது அவருக்கு ________ வயதாகிறது. 26. ( )

27. நாளை பொங்கல் திருநாள். அம்மா பொங்கல் வைக்க அரிசி, பால், __________ முதலிய பொருள்களை வாங்கி வந்தார். 27. ( )

28. தீபாவளிக்காக அம்மா வீட்டைச் சுத்தம் செய்ய தொடங்கினார். அவர் முதலில் வீட்டிலுள்ள __________ முடுக்குகளைச் சுத்தம் செய்தார். 28. ( )

| | |
|---|---|
| (1) முலை | (2) உரை |
| (3) என்பது | (4) வெல்லம் |
| (5) கறை | (6) மூளை |
| (7) உறை | (8) எண்பது |
| (9) வெள்ளம் | (10) கரை |

<u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u>

**29 முதல் 35 வரை இடம்பெற்றுள்ள கோடிட்ட இடம் ஒவ்வொன்றையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடு. அதன் பின்னர் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.**
**(14 மதிப்பெண்கள்)**

ஒரு மன்னர் தன் அரண்மனை மண்டபத்தில் நின்று தினமும் போர் பயிற்சிக்காக வில்வித்தை, வாள் வீசும் பயிற்சி போன்றவற்றைச் செய்து வந்தார். ஒரு நாள் மாலை நேரத்தில் தினமும் வழக்கம் போல் மன்னர் 29. ____________ பயிற்சிசெய்து கொண்டிருந்தார். அப்போது அரண்மனை மண்டபத்தில் ஒரு காகம் பறந்து வந்து அமர்ந்தது. அதைப் பார்த்த மன்னர் 30. ____________ காகத்தைப் பார்த்து, "ஏ காகமே! நீ ஏன் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாய்?" என்று கேட்டார். அதற்குக் காகம், "மன்னா! என் மேல் கோபம் வேண்டாம். உங்கள் 31. __________ பார்த்தால் எனக்குச் சிரிப்பு வருகிறது. அதுதான் சிரித்தேன்," என்றது. இதை அறிந்த மன்னருக்கு இன்னும் கோபம் வந்தது. காகமே! என் செயலில் என்ன 32. ____________ கண்டாய்?" என்று கேட்டார். உடனே காகம், "மன்னா! தாங்கள் என்ன தான் இந்த மாலை நேரத்தில் உடலை 33. __________ பயிற்சி செய்தாலும், அது காலை நேரத்தில் செய்வதுபோல இருக்காது. ஒவ்வொரு செயலை 34. __________ கால நேரம் உள்ளது. காலையில் செய்யும் பயிற்சியே 35. ____________ அளிக்கும். அதுவே உடற்பயிற்சிக்குச் சரியான நேரம்," எனக் கூறியபடி பறந்து சென்றது.

29.( )
30.( )
31.( )
32.( )
33.( )
34.( )
35.( )

| | | |
|---|---|---|
| (1) உணர்வு | (2) வளைத்து | (3) வருத்திக்கொண்டு |
| (4) செயலை | (5) வாள் | (6) வேலையை |
| (7) கோபத்துடன் | (8) புத்துணர்ச்சி | (9) மாற்றம் |
| (10) செய்வதற்கு | (11) அன்புடன் | (12) குற்றம் |

<u>சுயவிடைக் கருத்தறிதல்</u>

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

ஒரு நாட்டில் புகழ் பெற்ற ஓவியன் ஒருவன் இருந்தான். அந்த நாட்டு அரசனிடமிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது. மகிழ்ச்சியுடன் அரண்மனைக்குச் சென்றான். அவனை வரவேற்ற அரசன், "உன் ஓவியத் திறமையைப் பற்றி கேள்விப்பட்டேன். என்னை நீ அப்படியே ஓவியமாக வரைந்து தரவேண்டும்!" என்று கேட்டுக்கொண்டான். "அரசே! தங்கள் கட்டளையை அப்படியே நிறைவேற்றுகிறேன்!" என்றான் அவன்.

அரண்மனை ஓவியர்கள் சிலர் அவனைச் சந்தித்தனர். அரசரை ஓவியமாக வரைவதில் உள்ள சிக்கலைச் சொன்னார்கள். நம் அரசருக்கு ஒரு கண் குருடு அல்லவா? "ஆமாம். அதற்கு என்ன? என்று ஓவியன் கேட்டான். இதற்கு முன் ஓவியன் ஒருவன் அரசரை அப்படியே ஓவியமாக வரைந்திருந்தானாம். அதைப் பார்த்த அரசர் கோபம் கொண்டாராம். "உனக்கு என்ன ஆணவம் இருக்க வேண்டும்? என்னுடைய ஒரு கண் குருடு என்று ஓவியம் வரைந்து இருக்கிறாய். எல்லாருக்கும் இதை அறிவிக்கிறாயா? இப்படிச் செய்த உனக்கு நூறு கசையடியும், இரண்டாண்டு சிறைத்தண்டனையும் விதிக்கிறேன்!" என்றார். "ஐயோ! என்ன செய்வது? உள்ளபடி வரைந்தால் தண்டனையா? இந்த ஆபத்திலிருந்து எப்படித் தப்பிப்பது?" என்று அவன் சிந்தனையில் ஆழ்ந்தான். நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது.

மறுநாள் சொன்னதுபோலவே ஓவியன் ஓவியத்துடன் அரண்மனைக்கு வந்தான். அரசர் அந்த ஓவியத்தை வாங்கிப் பார்த்தார். அதில் அவர் வில்லில் அம்பு

பூட்டி ஒரு கண்ணை மூடிக் கொண்டு மான் ஒன்றிற்குக் குறி வைப்பதைப் போல அற்புதமாக வரையப்பட்டு இருந்தது. மூடியிருந்த கண் அவருடைய குருட்டுக் கண். திறந்திருந்த கண் பார்வையுள்ள கண். தன் குறை தெரியாத வண்ணம் அழகாக வரையப்பட்டிருந்த அந்த ஓவியத்தைக் கண்டு மகிழ்ந்தார் அரசர்.

"நீ என் குறை பிறருக்குத் தெரியாத வண்ணம் மிக அழகாக வரைந்திருக்கிறாய். உன் திறமைக்கு என் பாராட்டுக்கள். என் அன்புப் பரிசாக விலை உயர்ந்த இந்த முத்து மாலையையும், ஆயிரம் பொற்காசுகளையும் பெற்றுக்கொள்!" என்றார் அரசர். பரிசைப் பெற்ற அவன் "தண்டனையிலிருந்து தப்பித்ததும் அல்லாமல் பெரும் பொருளும் பரிசாகப் பெற்றேன்!" என்று மகிழ்ச்சியுடன் சொல்லிவிட்டு வீட்டிற்குச் சென்றான்.

Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20)

36. அரசன் ஓவியனை தன் அரண்மனைக்கு அழைத்ததற்குக் காரணம் என்ன? (3)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

37. அரசனிடம் இருந்த குறை என்ன? (2)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

38. அரசரை ஓவியமாக வரைவதில் உள்ள சிக்கல் என்ன? (4)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

39. ஓவியன் எவ்வாறு அரசரின் குறை தெரியாமல் அவரை வரைந்தான்? (5)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

40. அரசர் ஏன் ஓவியத்தைக் கண்டு மகிழ்ந்தார்? (2)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

41. ஓவியனின் திறமியால் ஏற்பட்ட நன்மைகள் என்ன? (4)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

முற்றும்

Primary - 6 Preliminary Exam

P6 PRELIMINARY TESTPAPER 8

ஓர் ஊரில் சிறிய குடும்பம்.......

1. 4 2. 2 3. 1 4. 2 5. 3 6. 4

7. 3 8. 3 9. 2 10. 1 11. 4 12. 3

13. 1 14. 3 15. 4 16. 3 17. 3

18. 1 19. 4 20. 2

21. 3 22. 1 23. 4

24. 7 25. 5 26. 8 27. 4 28. 1

29. 5 30. 7 31. 4 32. 12 33. 3 34. 10 35. 8

36. ஓவியனின் ஓவியத் திறமையைப் பற்றி கேள்விப்பட்டதால் தன்னை அவன் அப்படியே ஓவியமாக வரைந்து தரவேண்டும் என அரசன் விரும்பியதால் அவன் ஓவியனைத் தன் அரண்மனைக்கு அழைத்தான்.

37. அரசனின் ஒரு கண் குருடாக இருந்ததே அவனிடமிருந்த குறை.

38. அரசருடைய ஒரு கண் குருடு என்று ஓவியத்தில் வரைந்தால் ஓவியனுக்கு நூறு கசையடியும் இரண்டாண்டு சிறைத்தண்டனையும் அரசரால் விதிக்கப்படும். இதுவே அரசரை ஓவியமாக வரைவதில் உள்ள சிக்கல் ஆகும். .

39. ஓவியன் ஓவியத்தில் அரசர் வில்லில் அம்பு பூட்டி ஒரு கண்ணை மூடிக் கொண்டு மான் ஒன்றிற்குக் குறி வைப்பதுபோல் வரைந்தான். மூடியிருந்த கண் அவருடைய பார்வையிழந்தக் கண்ணாக இருந்தது. பார்வையுள்ள கண் திறந்திருந்தது. இவ்வாறு அவன் அரசனின் குறை தெரியாமல் அவரை வரைந்தான்.

40. தன்னுடைய குருட்டுக் கண் ஓவியத்தில் தெரியாதவாறு அது அழகாக வரையப்பட்டிருந்ததால் அரசர் அதைக் கண்டு மகிழ்ந்தார்.

41. ஓவியன் தன் திறமியால் தண்டனையிலிருந்து தப்பித்தான். மேலும், அரசரிடமிருந்து அன்புப்பரிசாக விலையுயர்ந்த முத்து மாலை ஒன்றையும் ஆயிரம் பொற்காசுகளையும் பெற்றான்.